2 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No. 426/2024

2025 வது ஆண்டு ஜூன் மாதம் 02 ம் நாள் வா.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.மாயாண்டி | வட்டம் | திருநெல்வேலி |
| க.பெ/த.பெ | முருகன் | கிராமம் | டவுண் |
| வயது | 35 | மதம் | |

02.06.2025 முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். இந்த வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 04.11.1994 தேதியிட்ட கிரைய ஆவணதின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகும், 07.03.2011 தேதியிட்ட பொது அதிகார பத்திரம் சான்றிட்ட நகல் வாசா.ஆ.2 ஆகும், 11.12.2017 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 3 ஆகும், 24.09.2024 தேதியிட்ட வில்லங்க சான்றிட்ட கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ. 4 ஆகும், அ.வ.எண்.52/2018 பிராது சார்பு செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.5 ஆகும், 18.09.2024 தேதியிட்ட வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் மற்றும் பதிவு தபால் ரசீது வா.சா.ஆ. 6 ஆகும், அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ. 7 ஆகும், 24.09.2024 தேதியிட்ட 1 ம் பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் வாதியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய சட்ட பதில் அறிப்பு வா.சா.ஆ. 8 ஆகும், 22.10.2024 தேதியிட்ட திருப்பப்பட்ட சட்ட அறிவிப்பு வா.சா.ஆ. 9 ஆகும், 16.10.2024 தேதியிட்ட வாதியால் அவரது மகன் மாயாண்டிக்கு

எழுதிக் கொடுத்த ஜெனரல் பவர் பத்திரம் வா.சா.ஆ. 10 ஆகும், ( வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் ஆவணங்கள் தாக்கல் செய்ய முதல் விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)